**சூழல் தொகுதி பாதுகாப்பு மற்றும் முகாமைத்துவ செயற்திட்டம் - 2021**

சூழல் தொகுதி பாதுகாப்பு மற்றும் முகாமைத்துவ செயற்திட்டத்தின் 2021 திசெம்பர் 31 இல் முடிவடைந்த ஆண்டிற்கான நிதிக்கூற்றுக்கள் மீதான கணக்காய்வு இலங்கை சனநாயக சோசலிசக் குடியரசிற்கும் சர்வதேச அபிவிருத்திச் சங்கத்திற்கும் இடையில் கைச்சாத்திடப்பட்ட 2016 செப்தெம்பர் 05 ஆம் திகதிய 5792–எல்கே ஆம் இலக்க கடன் உடன்படிக்கையின் II(பீ)(3) ஆம் பிரிவுடன் சேர்த்து வாசிக்கப்படும் இலங்கை சனநாயக சோசலிசக் குடியரசு அரசியலமைப்பின் 154(1) ஆம் உறுப்புரையிலுள்ள ஏற்பாடுகளுக்கமைய எனது பணிப்பின் கீழ் மேற்கொள்ளப்பட்டன. பாராளுமன்றத்திற்குச் சமர்ப்பிக்கப்பட வேண்டுமென நான் கருதுகின்ற எனது கருத்துரைகளும் அவதானிப்புக்களும் இந்த அறிக்கையில் காணப்படுகின்றன.

## 1.2 செயற்திட்டத்தின் அமுலாக்கம், நோக்கங்கள், நிதியளிப்பு மற்றும் காலப்பகுதி

செயற்திட்டக் கடன் உடன்படிக்கையின் பிரகாரம், மகாவலி அபிவிருத்தி மற்றும் சுற்றாடல் அமைச்சு செயற்திட்டத்தின் நிறைவேற்றல் முகவராக உள்ளதுடன் வன வளப் பாதுகாப்புத் திணைக்களம் மற்றும் வனசீவராசிகள் பாதுகாப்புத் திணைக்களம் என்பன செயற்திட்டத்தின் அமுல்ப்படுத்தல் முகவர்களாக உள்ளன. பாதுகாப்பு மற்றும் சமுதாய நன்மைகளிற்காக இலங்கையில் தெரிவுசெய்யப்பட்ட இடங்களிலுள்ள சூழல் தொகுதி முகாமைத்துவத்தை முன்னேற்றுவதே செயற்திட்டத்தின் குறிக்கோளாகும். ஆரம்ப நில அளவை திட்டமிடல் மற்றும் முகாமைத்துவம், இயற்கை வளங்களின் நிலைபேறான பயன்பாடு மற்றும் மனிதன் – யானை சகவாழ்வு, பாதுகாக்கப்பட்ட பிரதேச முகாமைத்துவம் மற்றும் நிறுவகரீதியான இயலளவு மற்றும் செயற்திட்ட முகாமைத்துவம் போன்ற பெயர்களிலான நான்கு பிரதான கூறுகளின் கீழ் செயற்திட்ட நடவடிக்கைகள் அமுல்ப்படுத்தப்படுகின்றன. கடன் உடன்படிக்கையின் பிரகாரம், செயற்திட்டத்தின் மதிப்பிடப்பட்ட மொத்தக் கிரயம் ரூபா 10,007.39 மில்லியனிற்கு சமமான ஐ.அ.டொலர் 45 மில்லியனானதுடன் முழுத் தொகையும் சர்வதேச அபிவிருத்திச் சங்கத்தால் நிதியளிக்கப்படுவதற்கு உடன்பாடு காணப்பட்டது. செயற்திட்டமானது அதன் நடவடிக்கைகளை 2016 திசெம்பர் 01 இல் தொடங்கியிருந்ததுடன் 2021 யூன் 30 அளவில் பூர்த்திசெய்யப்படுவதற்கு பட்டியலிட்டிருந்தது. எனினும் செயற்திட்ட நடவடிக்கைகள் பூர்த்திசெய்யப்படும் திகதி 2022 யூன் 30 வரை நீடிக்கப்பட்டிருந்தது.

## 1.3 முனைப்பழியுள்ள அபிப்பிராயம்

எனது அறிக்கையின் அட்டவணை 2 இல் விபரிக்கப்பட்ட விடயங்களின் தாக்கங்களைத் தவிர்த்து, செயற்திட்டத்தின் 2021 திசெம்பர் 31 இல் உள்ளவாறான நிதி நிலைமையினையும் அத்திகதியில் முடிவடைந்த ஆண்டிற்கான அதனது செலவினக் கூற்றினையும் காசுப்பாய்ச்சலினையும் இலங்கை கணக்கீட்டு நியமங்களுக்கு இணங்க இணைக்கப்பட்டுள்ள நிதிக்கூற்றுக்கள் உண்மையாகவும் நியாயமாகவும் தருகின்றன என்பது எனது அபிப்பிராயமாகும்.

## 1.4 முனைப்பழியுள்ள அபிப்பிராயத்திற்கான அடிப்படை

இலங்கை கணக்காய்வு நியமங்களுக்கு (எஸ்எல்ஏயூஎஸ்எஸ்) இணங்க எனது கணக்காய்வினை நான் மேற்கொண்டேன். அந்நியமங்களின் கீழான எனது பொறுப்புக்கள் எனது அறிக்கையில் நிதிக்கூற்றுக்களின் கணக்காய்விற்கான கணக்காய்வாளரின் பொறுப்புக்கள் பந்தியில் மேலும் விபரிக்கப்படுகின்றன. எனது அபிப்பிராயத்திற்கான அடிப்படை ஒன்றினை வழங்குவதற்கு போதியளவும் பொருத்தமானதுமான கணக்காய்வுச் சான்றுகளை நான் பெற்றுக்கொண்டுள்ளேன் என நான் நம்புகிறேன்.

## 1.5 நிதிக்கூற்றுக்களிற்கான முகாமைத்துவத்தினதும் அவ் ஆளுகைக்கு உட்பட்ட தரப்பினர்களினதும் பொறுப்புக்கள்

நிதிக்கூற்றுக்களை இலங்கை கணக்கீட்டு நியமங்களிற்கு இணங்க தயாரித்து சரியாகவும் நியாயமாகவும் சமர்ப்பித்தல் மற்றும் மோசடி அல்லது தவறுகளின் காரணமாக ஏற்படக்கூடிய பொருண்மையான பிறழ் கூற்றுக்களிலிருந்து விடுபட்ட நிதிக்கூற்றுக்களைத் தயாரிப்பதற்கு அவசியமானதென முகாமைத்துவம் நிர்ணயிக்கின்ற அத்தகைய உள்ளகக் கட்டுப்பாடுகள் என்பவற்றிற்கு முகாமைத்துவம் பொறுப்பாக உள்ளது.

செயற்திட்டத்தின் நிதி அறிக்கையிடல் செயன்முறையை மேற்பார்வை செய்தல் அவ் ஆளுகைக்குட்பட்ட தரப்பினர்களின் பொறுப்பாக உள்ளது.

## 1.6 நிதிக்கூற்றுக்களின் கணக்காய்விற்கான கணக்காய்வாளரின் பொறுப்புக்கள்

மோசடி அல்லது தவறு காரணமாக ஏற்படக்கூடிய அனைத்துப் பொருண்மையான பிறழ் கூற்றுக்களிருந்தும் நிதிக்கூற்றுக்கள் விடுபட்டுள்ளனவா என்பதற்கான நியாயமான உறுதிப்பாட்டைப் பெற்றுக்கொள்வதும் எனது அபிப்பிராயத்தை உள்ளடக்குகின்ற கணக்காய்வாளர் அறிக்கை ஒன்றை வழங்குவதும் எனது குறிக்கோள்களாக உள்ளன. நியாயமான உறுதிப்பாடென்பது உறுதிப்பாட்டின் உயர் நிலையொன்றாக காணப்படுகின்ற போதிலும் இலங்கை கணக்காய்வு நியமங்களிற்கு இணங்க மேற்கொள்ளப்படுகின்ற கணக்காய்வில் பொருண்மையான பிறழ்கூற்றொன்று காணப்படுகையில் அதனை எல்லா வேளையிலும் கண்டுபிடிக்கும் என்பதற்கு அது உத்தரவாதத்தினை வழங்குவதில்லை. பிறழ்கூற்றுக்களானவை மோசடி அல்லது தவறு காரணமாக எழக்கூடுமென்பதுடன் அவற்றுள் இந்த நிதிக்கூற்றுக்களை அடிப்படையாகக் கொண்டு பாவனையாளர்களால் மேற்கொள்ளப்படும் பொருளாதாரத் தீர்மானங்கள் மீது தனித்தனியாகவோ அல்லது கூட்டுமொத்தமாகவோ செல்வாக்குச் செலுத்தக்கூடுமென நியாயமாக எதிர்பார்க்கப்படுபவை பொருண்மையானவையாக கருத்திலெடுக்கப்படும்.

இலங்கை கணக்காய்வு நியமங்களின் பிரகாரம் கணக்காய்வின் பகுதியொன்றாக, கணக்காய்வின் போது உயர்தொழில் தீர்ப்புக்களை நான் மேற்கொண்டு உயர்தொழில் ஐயப்பாட்டினையும் பேணுகின்றேன். அத்துடன்;

- மோசடி அல்லது தவறு காரணமாக நிதிக்கூற்றுக்களிற்கு ஏற்படக்கூடிய தவறான கூற்றுக்களின் பொருண்மையான ஆபத்துக்களை இனங்கண்டு மதிப்பீடு செய்தல், அந்த இடர்களை எதிர்கொள்ளக்கூடிய கணக்காய்வு நடைமுறைகளை வடிவமைத்துச் செயற்படுத்துதல் மற்றும் எனது அபிப்பிராயத்திற்கான அடிப்படை ஒன்றினை வழங்குவதற்குப் போதியளவும் பொருத்தமானதுமான கணக்காய்வுச் சான்றுகளை பெற்றுக்கொள்ளுதல். மோசடியானது தவறான கூட்டிணைவு, தவறான ஆவணம் தயாரித்தல், வேண்டுமென்று விட்டுவிடுதல்கள், தவறான வெளிப்படுத்தல்கள் அல்லது உள்ளகக் கட்டுப்பாட்டிலான எல்லை மீறல்களை உள்ளடக்குவதால் மோசடி மூலம் ஏற்படும் பொருண்மையான பிறழ் கூற்றொன்றைக் கண்டுபிடிக்காது விடுவதால் ஏற்படும் ஆபத்தானது தவறின் மூலமான விளைவொன்றைவிடக் கூடியதாகும்.

- சந்தர்ப்பங்களிற்குப் பொருத்தமான கணக்காய்வு நடைமுறைகளை வடிவமைப்பதற்காக கணக்காய்வுடன் தொடர்புடைய உள்ளகக் கட்டுப்பாடுகள் தொடர்பான அறிவை பெற்றுக்கொள்வதற்காகவேயன்றி செயற்திட்டத்தின் உள்ளகக் கட்டுப்பாடுகளின் செயற்திறன் மீது அபிப்பிராயமொன்றை தெரிவிக்கும் நோக்கத்திற்காக அல்ல.

- பயன்படுத்திய கணக்கீட்டுக் கொள்கைகளின் பொருத்தப்பாடுகளையும் கணக்கீட்டு மதிப்பீடுகளின் நியாயத் தன்மையினையும் மற்றும் முகாமைத்துவத்தால் மேற்கொள்ளப்பட்ட தொடர்புடைய வெளிப்படுத்தல்களினையும் மதிப்பீடு செய்தல்.

- வெளிப்படுத்தல்கள் அடங்கலாக நிதிக்கூற்றுக்களின் ஒட்டுமொத்த சமர்ப்பித்தல், கட்டமைப்பு மற்றும் உள்ளடக்கங்களை மதிப்பீடு செய்தல் மற்றும் நியாயமான சமர்ப்பித்தலினை நிறைவேற்றுவதற்கு அடிப்படையாகக் காணப்பட்ட கொடுக்கல் வாங்கல்கள் மற்றும் நிகழ்வுகளை நிதிக்கூற்றுக்கள் பிரதிநிதித்துவம் செய்கின்றனவா என்பதனை மதிப்பீடு செய்தல்.

எனது கணக்காய்வின் போது என்னால் இனங்காணப்படுகின்ற உள்ளகக் கட்டுப்பாடுகளிலுள்ள ஏனைய விடயங்களிற்கிடையேயான ஏதாவது முக்கியமான குறைபாடுகள் உள்ளடங்கிய முக்கியமான கணக்காய்வுக் காண்புகள் தொடர்பாக ஆளுகையுடன் தொடர்புபடுத்தப்பட்டவைகளை நான் தெரிவிக்கின்றேன்.

**2. நிதிக்கூற்றுக்கள் மீதான கருத்துரைகள்**

**2.1 கணக்கீட்டுக் குறைபாடுகள்**

| இல. | கணக்கீட்டு குறைபாடுகள் | தொகை ரூபா | முகாமைத்துவத்தின் பதில்கள் | கணக்காய்வாளரின் பரிந்துரைகள் |
|---|---|---|---|---|
| (அ) | வனசீவராசிகள் பாதுகாப்புத் திணைக்களத்தால் பூர்த்தி செய்யப்பட்ட 11 ஒப்பந்தங்களின் ரூபா 16.2 மில்லியன் தொகையான நிறுத்தி வைத்தல் பணம் ரூபா 18.6 மில்லியனாகக் கணக்கீடு செய்யப்பட்டிருந்தது. எனவே, நிறுத்திவைத்தல் பண மீதி நிதிக்கூற்றுக்களில் அதிகரித்துக் காட்டப்பட்டுள்ளது. | 2.4 | அதிகரித்து கணக்கீடு செய்யப்பட்ட நிறுத்திவைத்தல் பெறுமதியை சீர்செய்வதற்கு நடவடிக்கை எடுக்கப்படும். | நிறுத்திவைத்தல் பணம் சரியாக இனங்காணப்பட்டு கணக்கீடு செய்யப்பட வேண்டும். |
| (ஆ) | வனப் பாதுகாப்புத் திணைக்களத்திற்குச் சொந்தமான பதவியா காப்புக்காட்டைச் (reserve) சுற்றிலும் பயன்படுத்துவதற்காக 2,800 எல்லைக் கம்பங்களை உருவாக்குவதற்கு விவசாயிகள் அமைப்புக்களுக்கு மேற்கொள்ளப்பட்ட தொழிலாளர் கட்டணங்கள் இலங்கை கணக்கீட்டு நியம இல. 16 இன் பிரகாரம் நிலையான சொத்துக்களாக இனங்காணப்பட்டிருக்கவில்லை. | 5.9 | ரூபா 5.9 மில்லியன் தொகையை உரிய உரிய சொத்துக் கணக்குகளுக்கு மாற்றுவதற்கு தேவையான நடவடிக்கை எடுக்கப்படும். | இலங்கை கணக்கீட்டு நியமங்களை பின்பற்றுவதற்கு நடவடிக்கை எடுக்கப்பட வேண்டும். |
| (இ) | வன பாதுகாப்பு திணைக்களத்திற்கு சொந்தமான ஹுருலு சூழலியல் பூங்காவில் உள்ள மலசலகூட முறைமையை புனரமைப்பதற்காக மேற்கொள்ளப்பட்ட செலவினம் இலங்கை கணக்கீட்டு நியம இல. 16 இன் பிரகாரம் நிலையான சொத்துக்களாக இனங்காணப்பட்டிருக்கவில்லை. | 3.2 | வனத் திணைக்களத்தின் கீழ் ஹுருலு சுற்றுச்சூழல் பூங்காவில் மலசலகூட திட்டத்தை திருத்துவதற்காக செலவிடப்பட்ட ரூபா 3.2 மில்லியன் தொகையை மூலதனமாக்குவதற்குத் தேவையான நடவடிக்கை எடுக்கப்படும். | -மேற்படி- |
| (ஈ) | வனசீவராசிகள் பாதுகாப்புத் திணைக்களம் மற்றும் வனப் பாதுகாப்புத் திணைக்களத்தின் நிர்மாணம் மற்றும் ஏனைய நடவடிக்கைகளுக்காக ஏற்பட்ட முறையே ரூபா 6 மில்லியன் மற்றும் ரூபா 3.5 மில்லியன் கிரயம் 2021 திசெம்பர் 31 இல் உள்ளவாறு அட்டுறு செலவினங்களாகக் கணக்கீடு செய்யப்பட்டிருக்கவில்லை. | 9.5 | எதிர்காலத்தில் இதுபோன்ற தவறுகள் இடம்பெறுவதை தடுப்பதற்கு தேவையான நடவடிக்கை எடுக்கப்படும். | அட்டுறு செலவினங்கள் சரியாக இனங்காணப்பட்டு கணக்கீடு செய்யப்பட வேண்டும். |

**2.2 சட்டங்கள், விதிகள் மற்றும் பிரமாணங்களுடன் இணங்காமை**

| இல. | சட்டங்கள், விதிகள் மற்றும் பிரமாணங்களுடனான தொடர்பு | இணங்காமைகள | முகாமைத்துவத்தின் பதில்கள் | கணக்காய்வாளரின் பரிந்துரைகள் |
|---|---|---|---|---|
| (அ) | அரசாங்க பெறுகை வழிகாட்டலின் 4.2.1 ஆம் பிரிவு | விபரமான பெறுகைத் திட்டம் தயாரிக்கப்பட்டிருக்கவில்லை. | வருடாந்த பெறுகைத் திட்டம் தயாரிக்கப்பட்டு தேவையான திருத்தங்களுடன் அங்கீகாரம் அளிக்கப்பட்டது. | அரசாங்க பெறுகை வழிகாட்டலின் ஏற்பாடுகளுடன் இணங்குவதற்கு நடவடிக்கை எடுக்கப்பட வேண்டும். |
| (ஆ) | 2018 யூலை 16 ஆம் திகதிய 08/2018 ஆம் இலக்க தேசிய பாதீட்டு சுற்றறிக்கையின் 07(iii) ஆம் பந்தி | சுற்றறிக்கை அறிவுறுத்தலுக்கு முரணாக செயற்திட்ட பணிப்பாளரால் இரண்டு வாகனங்கள் பயன்படுத்தப்பட்டிருந்தன. | இந்த வாகனத்தை தற்போது செயற்திட்ட உத்தியோகத்தர்கள் அனைவரும் தேவைக்கேற்ப பயன்படுத்தி வருகின்றனர். | சுற்றறிக்கை அறிவுறுத்தலுக்கு இணங்க நடவடிக்கை எடுக்கப்பட வேண்டும். |
| (இ) | 2019 மார்ச் 15 ஆம் திகதிய 01/2019 ஆம் இலக்க தேசிய பாதீட்டு சுற்றறிக்கையின் 09 ஆம் பந்தி மற்றும் செயற்திட்ட செயற்பாட்டு கையேட்டின் 2.1.1 ஆம் பந்தி | சுற்றறிக்கையின் பிரகாரம் செயற்திட்ட அமுல்ப்படுத்தல் குழு அமைக்கப்பட்டுள்ளது. எனினும், அதற்கு திறைசேரி பிரதிநிதி நியமிக்கப்பட்டிருக்கவில்லை. இது குறைந்தபட்சம் காலாண்டுக்கு ஒரு முறையாவது நடாத்தப்பட வேண்டிய போதிலும் 2016 முதல் 2021 வரை அது நடைபெற்றிருக்கவில்லை. | கொவிட்-19 தொற்றுநோய் நிலைமை காரணமாக செயற்திட்ட வழிகாட்டல் குழு கூட்டமும் சிக்கலாக இருந்தது, அதன் பிரகாரம் 2020-2021 ஆம் ஆண்டில் செயலாளர் பதவி மாற்றப்பட்டிருந்தது. | சுற்றறிக்கை அறிவுறுத்தல் மற்றும் செயற்திட்ட செயற்பாட்டு கையேட்டிற்கு இணங்க நடவடிக்கை எடுக்கப்பட வேண்டும். |
| (ஈ) | செயற்திட்ட செயற்பாட்டு கையேட்டின் 4.2.5 ஆம் பந்தி | நிலையான சொத்துக்கள் மெய்மையாய்வு வருடாந்தம் நடாத்தப்பட வேண்டிய போதிலும் வனசீவராசிகள் பாதுகாப்பு திணைக்களம் மற்றும் வன பாதுகாப்பு திணைக்களம் என்பன அதற்கிணங்க மேற்கொண்டிருக்கவில்லை. | சொத்து மெய்மையாய்வு திணைக்களங்களால் மேற்கொள்ளப்படுகிறது. | செயற்திட்ட செயற்பாட்டுக் கையேட்டின் பிரகாரம் நடவடிக்கை எடுக்கப்பட வேண்டும். |

3. பௌதீக செயலாற்றல்

3.1 செயற்திட்ட செயற்பாடுகளின் பௌதீக செயன்முன்னேற்றம்

| கூறு | செயற்பாடுகள் | 2021 திசெம்பர் 31 இல் உள்ளவாறானது<br>எதிர்பார்க்கப்பட்ட பௌதீக செயலாற்றல் | <br>அடையப்பட்ட செயலாற்றல் | கணக்காய்வு விடயங்கள் | தாமதத்திற்கான காரணங்கள் |
|---|---|---|---|---|---|
| | | சதவீதம் | சதவீதம் | | |
| 3(இ) | நுவரெலியா இலங்கை வனவியல் நிறுவகத்தின் கனிஷ்ட பதவியணியினர் விடுதிகள் மற்றும் சிரேஷ்ட பதவியணியினர் விடுதிகளை நிர்மாணித்தல் (பொதி 1) | 100 | 56.1 | குறிப்பிடப்பட்ட காலத்திற்குள் இச் செயற்திட்டம் பூர்த்தி செய்யப்பட்டிருக்கவில்லை. மேலும் காலதாமதம் தொடர்பாக தேவையான நடவடிக்கைகள் எடுக்கப்பட்டிருக்கவில்லை. | கட்டமைப்பு சிக்கல்களின் இருக்கும் தன்மை, இறுதிப் பயனர் அனுமதியின் தாமதம், வரைபடங்கள் மற்றும் அறிவுறுத்தல்களில் சிக்கல் மற்றும் எரிபொருள் மற்றும் மூலப்பொருள் பற்றாக்குறை. |
| 3(இ) | நுவரெலியா இலங்கை வனவியல் நிறுவகத்தில் உட்கட்டமைப்பு வேலைகளின் நிர்மாணம் மற்றும் கட்டிடங்களை புனரமைத்தல் (பொதி 2) | 100 | 50.3 | -மேற்படி- | கழிவுநீர் சுத்திகரிப்பு நிலையத்தின் இருப்பிடத்தை இறுதி செய்வதில் உள்ள சிக்கல்கள், கட்டமைப்பு சிக்கல்கள் மற்றும் எரிபொருள் மற்றும் மூலப்பொருள் பற்றாக்குறை |
| 3(இ) | நுவரெலியாவில் உள்ள வனவியல் நிறுவகத்தின் சிற்றுண்டிச்சாலை நிர்மாணம், வேலைத்தள புனரமைப்பு- (பொதி 3) | 100 | 40.62 | -மேற்படி- | தாமத அறிவுறுத்தல், மாற்றப்பட்ட குளியலறை விபரங்கள் மற்றும் எரிபொருள் மற்றும் மூலப்பொருள் பற்றாக்குறை. |
| 3(இ) | நுவரெலியாவில் உள்ள வனவியல் நிறுவக உடற்பயிற்சி கூடம், பணிப்பாளர் பங்களா, சுற்றுலா பங்களாவை புதுப்பித்தல் மற்றும் Garages I நிர்மாணித்தல் (பொதி 4) | 100 | 86.95 | -மேற்படி- | ஏனைய ஒப்பந்ததாரர்கள் மூலம் குழாய் பதிக்கும் போது நிர்மாணத் தடைகள் மற்றும் எரிபொருள் மற்றும் மூலப்பொருள் பற்றாக்குறை. |
| 3(இ) | நுவரெலியா இலங்கை வனவியல் நிறுவகத்தின் புதிய | 94.5 | 34.2 | -மேற்படி- | உள்ளக வீதி நிர்மாணத்திற்காக மரங்களை |

| | | | | | |
|---|---|---|---|---|---|
| | நிர்வாக பதவியணியினர் தங்குமிடம் (3 தொகுதிகள்), விளையாட்டு மைதானம் மற்றும் வீதி வலையமைப்பு நிர்மாணம் (பொதி 5) | | | | அகற்றுவதில் தாமதம், எல்லை வேலி நிர்மாணத்தை இனங்காணுதல் மற்றும் சீரமைத்தலில் சிக்கல்கள் மற்றும் எரிபொருள் மற்றும் மூலப்பொருள் பற்றாக்குறை. |
| 3(இ) | நுவரெலியா இலங்கை வனவியல் நிறுவகத்தின் புதிய நிர்வாக கட்டிட நிர்மாணம் மற்றும் கனிஷ்ட பதவியணியினர் தங்குமிடம் மற்றும் கேட்போர் கூட கட்டிடத்தின் புனரமைப்பு (பொதி 06) | 33.05 | 18.1 | -மேற்படி- | இறுதிப் பயனரின் அனுமதி மற்றும் எரிபொருள் மற்றும் மூலப்பொருள் பற்றாக்குறை காரணமாக தாமதமானது. |
| 3(இ) | கிரிதலே தேசிய வனவிலங்கு ஆராய்ச்சி மற்றும் பயிற்சி நிலையத்தில் தற்போதுள்ள கல்வி/நிர்வாகக் கட்டிடத்தை புதுப்பித்தல் (பொதி 01) | 100 | 30.5 | -மேற்படி- | ஒப்பந்ததாரர் காசுப்பாய்ச்சல் பிரச்சினைகளை எதிர்கொள்கிறார். |
| 3(இ) | கிரிதலே தேசிய வனவிலங்கு ஆராய்ச்சி மற்றும் பயிற்சி நிலையத்தில் உள்ள பழைய விடுதியை புதுப்பித்தல் (பொதி 02) | 100 | 19 | -மேற்படி- | ஒப்பந்ததாரர் காசுப்பாய்ச்சல் பிரச்சினைகளை எதிர்கொள்கிறார். |
| 3(இ) | கிரிதலே தேசிய வனவிலங்கு ஆராய்ச்சி மற்றும் பயிற்சி நிலையத்தில் புதிய கல்வி வளாகத்தை நிர்மாணித்தல் (பொதி 03) | 100 | 39 | -மேற்படி- | ஒப்பந்ததாரர் காசுப்பாய்ச்சல் பிரச்சினைகளை எதிர்கொள்கிறார். |

| | |
|---|---|
| **முகாமைத்துவத்தின் பதில்** | நுவரெலியா வனவியல் நிறுவகம் 2022 திசெம்பரில் பூர்த்தி செய்யப்படும் என எதிர்பார்க்கப்படுகிறதுடன் கிரிதலே பயிற்சி நிலையத்தின் ஒப்பந்ததாரர் பணி நீக்கம் செய்யப்பட்டு மீண்டும் கேள்வி வழங்கப்படும் என எதிர்பார்க்கப்படுகிறது. |
| **கணக்காய்வாளரின் பரிந்துரை** | செயற்திட்டத்தின் நோக்கங்களை அடைந்துகொள்வதற்கு நடவடிக்கை எடுக்கப்பட வேண்டும். |

### 3.2 ஒப்பந்த நிர்வாகம்

| கணக்காய்வு விடயம் | முகாமைத்துவத்தின் பதில் | கணக்காய்வாளரின் பரிந்துரை |
| --- | --- | --- |
| யால தேசிய பூங்காவின் நீர்த்தாங்கிகள் மற்றும் பதவியணியினரிற்கான நீர் விநியோக ஒப்பந்தத்தில் 11,123 மீற்றர்களுக்கான ஹைட்ராலிக் (hydraulic) அழுத்த சோதனையை மேற்கொள்ளாமல் ஒப்பந்ததாரருக்கு ரூபா 17 மில்லியன் தொகை செலுத்தப்பட்டுள்ளது. | அழுத்த சோதனைக்குப் பின்னர் கொடுப்பனவு மேற்கொள்ளப்படுகிறது. | கடனுக்கான பெறுவனவகள் வினைத்திறனாக பயன்படுத்தப்பட வேண்டும். |